DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No. 37/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 16 | நாள் | : 03.10.2024 |
| பெயர் | : டாக்டர். பால்துரை | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 3rd day of October 2024.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் கரிவலம்வந்தநல்லூர் வடக்கு ரத வீதியில் தனியார் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 2 மணிக்கு நான் மருத்துவமனையில் இருந்த போது ஒரு குழந்தையை அவரது பெற்றோர்கள் எடுத்துவந்தனர். நான் பரிசோதித்த போது குழந்தையின் நாடித்துடிப்பு ஏதும் காணப்படவில்லை. அவரது இதயத் துடிப்பும் காணப்படவில்லை. சுவாசம் இருப்பதாகவும் காணமுடியவில்லை. நான் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் படி அவர்களை அறிவுருத்தினேன். அவர்கள் மருத்துவமனைக்கு சென்றார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால்

செய்தித்தாள்களில் குழந்தை இறந்து போனதாக தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் கடந்த 48 வருடங்களாக மருத்துவமனை நடத்திவருகிறேன். அது என் சொந்த மருத்துவமனை ஆகும். எங்கள் மருத்துவமனை உள்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதி கொண்ட மருத்துவமனை ஆகும். சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கும் போது பதிவு செய்வோம் என்றால் சரிதான். ஆனால் அனுமதிக்கும் முன்பாக அவர் அனுமதிக்கத் தகுதியானவரா என்று சோதனை செய்து அனுமதிப்போம். அந்த குழந்தைக்கு உதட்டில் காயம் இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. குழந்தை எழும்பவில்லை என்று கூறி தான் அவரது தந்தை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். குழந்தையை முதலில் கரிவலம்வந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் பின்னர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்களா என்று நேரில் தெரியாது. போலீசார் கூறித்தான் தெரியும். நான் குழந்தையை எங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வந்து அனுமதித்து பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பதிவு செய்த விவரத்தை போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் சிகிச்சை அளித்த விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 37 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 17 | நாள் | : | 03.10.2024 |
| பெயர் | : | குருசாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 3rd day of October 2024.**

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரிந்த போது கடந்த 18.09.2019 அன்று சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.393/2019 வழக்கில் இறந்த சடலத்தின் உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்காக ஆய்விற்கு அனுப்பப்படுவதாக சிவகிரி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவரின் வேண்டுகோள் கடிதத்துடன் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பாதுகாப்பில் இருந்த பிரேத பரிசோதனை பிஎம்.1481/2019 பரிசோதனை செய்யப்பட்ட உடலின்

உள்ளுறுப்புகளை சேதுலட்சுமி என்ற முதல் நிலை காவலர் கொண்டுவந்திருந்தார். அவர் கொண்டு வந்திருந்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் உள்ளுறுப்புகளான இரைப்பை, சிறுகுடல், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததில் உள்ளுறுப்புகளில் நச்சுத்தன்மை ஏதும் காணப்படவில்லை என நான் சான்று வழங்கினேன். நீதித்துறை நடுவர் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.7. நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.8. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை

<u>மறுவிசாரணை</u>

இல்லை